# கண்ணீர் அஞ்சலி





**அன்னை மடியில்** 18.10.1936

**ஆண்டவன் அடியில்** 25.10.2019

# அமரர் விஸ்வலிங்கம் கனகரத்தினம்

**(ஓய்வுநிலை கணக்காய்வுப் பரிசோதகர்,**
**கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விஸ்வலிங்கம் கனகரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அமரர் அவர்கள் தமது அரச சேவைக் காலத்திலும் ஓய்வு பெற்றதன் பின்னரும் எமது காரை மக்களின் முன்னேற்றத்திற்காக பெரும் பணியாற்றியுள்ளார்.

காரைநகருக்கு தனியான பிரதேச செயலகம் வந்ததன் பின்னர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் எம் மக்களின் தேவைக்காக பல நல்ல திட்டங்களை முன் வைத்து அத்திட்டங்கள் நிறைவேறப் பாடுபட்டதையும் இத்தருணத்தில் நினைவு கூருகின்றோம். அத்தோடு இவரின் அன்புச் சகோதரர் வைத்திய கலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம் அவர்கள் எம் மக்களின் முன்னேற்றத்திற்கும் கல்லூரி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பல லட்சம் ரூபா நன்கொடை அளிப்பதற்கு அமரர் அவர்களின் முயற்சியும் ஓர் காரணமாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**தங்கள் பிரிவால் துயருறும்,**
**காரைநகர் அபிவிருத்திச் சபையினர்.**